**குருணாகல் மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருணாகல் மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகல் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(ஐஐஐ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ை)(ஈ)(ை) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா. 11,568,364 பெறுமதியொன்று நிதிக் கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் உரிய வகையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள தாகவும் ஊழியர் கடன், நீர் வைப்புக்களின் மீதி களில் வேறுபாடு என்பவற்றை விரைவில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிய தருகின்றேன். | சரியாக கணக்குகள் வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா. 47,705,494 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தது. | சகல கணக்குகளையும் தவறாமல் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | சகல கணக்குகளும் விடுபடாமல் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் சபையின் 03 கட்டிடங்களின் அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்டிருந்த ரூபா. 89,340,481 பெறுமதி மூலதன மாக்கப்பட்டிருக் வில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வுடன் கலந்தாலோசித்து விக்கிரம நாயக்க கணக்கு முறைமை பின் கீழ் கணக்கீடு செய்வதற்கான அறிவுறுத்தல் கள் வழங்கபபடுமென அறியத் தருகிறேன். | கட்டிடங்களின் அபிவிருத்திக்கான செலவீனங்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாநகர சபைக்கு சொந்தமான வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி சரியாக கணக்கிடப்படாமை காரணமாக மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 11,305,363 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | நகர சபையின் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் உப அட்டவணைகள் மற்றும் மோட்டார் வாகனக் கணக்குகளை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | நகர சபை கடன் தொகை மூலம் செய்யப்பட்ட ரூபா. 506,074,880 பெறுமதியான செலவினம் 54 ஆம் நாட்குறிப்பு அட்டவணை மூலம் கட்டிடக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதனச் செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் மூலதனச் செலவு அப் பெறுமானத்தால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மூலதன ஈடுபாட்டிற்காக வருமானத்தில் பங்களிப்புச் செய்யும் கணக்கு அப் பெறுமானத்தால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்காய்வினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றினால் செய்யப்படுகின்ற அபிவிருத்தி செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | வருடத்திற்குள் எவ்வித ஒப்பந்தங்களும் இன்றி கைவிடப்பட்டிருந்த 05 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா. 7,650,000 தொகை கடனாளிகளாக கணக்கிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் செய்யப்படாத செயற்திட்டங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோருக்கு ஒதுக்கீடு செய்யப்படாமலிருக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | கடனாளிகள் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 6,441,600 பெறுமதியான 04 கொள்கலன் பெட்டிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | உரிய கொள்கலன் பெட்டிகளை மூலதனமாக்கல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | வருடத்திற்குரிய சகல இயந்திர உபகரணங்களினதும் கொள்வனவு மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ஆம் இலக்க நிலையான வைப்பிற்குரிய ரூபா. 7,000,000 தொகைக்காக வட்டி கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | ஆம் இலக்க நிலையான வைப்பிற்குரிய வட்டி கணக்கிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | வட்டி வருமானம் சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகாரமின்றி நீக்கப்பட்டிருந்த ரூபா. 5,934,935 பெறுமதியான ரஜபிஹில்ல ஓய்வூதிய விடுதியிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கு பதிவு மூலம் வெளிப்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகின்றேன் | கணக்கு பதிவுகளின் கீழ் வெளிப்படுத்தப்படாதிருந்தமையால் முறையான அங்கீகாரமின்றி முறையான அங்கீகாரமின்றி வருமானம் நீக்கப்படாது கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 55 ஆம் நாட்குறிப்பு பதிவு மூலம் செலவினங்கள் மீளப் பெறல் ரூபா. 5,104,758 தொகையானது செலவினங்கள் மீளப் பெறுதல் கணக்கிற்கு செலவிடப்படுவதற்குப் பதிலாக வரவிடப்பட்டு மூலதன செலவினக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பித்த பிரகாரம் கணக்கு வைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சுந்தராபொல குப்பைத் தொகுதியில் காணப்பட்ட ரூபா. 6,240,144 பெறுமதியான பசளைப் இருப்பொன்று கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | பசளைப் உரைகள் சுந்தராபொல கழிவுப்பொருள் தொகுதிக்கு விடுவிக்கப்பட்டதாக அறியத் தருகிறேன். | மாநகர சபையின் சகல வளாகங்களிலும் காணப்படுகின்ற சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஔ) | நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கிற்கும் இடையே ரூபா. 545,417,039 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் கணக்காய்வாளருடன் கலந்தாலோசித்து உரிய கணக்குகளுக்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன். | சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 14 கணக்குப் விடயங்களின் பெறுமதியையும் அதனுடன் தொடர்புடைய அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா. 299,219,011 வேறுபாடு அவதானிக்கப்பட்ட | கணக்காய்வாளர் மூலம் காட்டப்பட்டுள்ள 14 கணக்குப் பிரிவுகளுக்குரிய உப அட்டவணைகளில் பல வருடங்களாக வேறுபாடுகள் காணப்படுவதுடன் சில 2020 ஆம் ஆண்டில் சீர் செய்யப்பட்டுள்ள துடன் 2021 ஆம் ஆண்டில் கணக்குகளுடன சீர்செய்யப்பட நடவடிக்கைகள் | மீதிகளின் வேறுபாட்டை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| துடன் மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் என்பதை அறியத் தருகிறேன். | |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 57,371,648 கூட்டுத் தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை | கணக்குகளுக்கு உரிய உப அட்டவணைகள் விரைவில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு நிலுவைகளை உறுதி செய்வதற்கான சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 185 (1) ஆம் பிரிவு | ஒவ்வொரு மாநகர சபைக்கும் மாநகர சபை நிதியமொன்று காணப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதும் நகர முதல்வர் நிதியம் தொடர்பாக சட்டத்தில் ஏற்பாடுகள் மேற்கொள்ளா திருக்கையில் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபா. 2,279,800 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு ரூபா 2,008,852 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 215 ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபைக்கு இருக்கின்ற அதிகாரத்திற்கு அமைய நகர சபை வரவு செலவுத் திட்ட ஆவணங்களுக்கு நகர முதல்வர் நிதியம் எனும் பெயரில் செலவின விடயமொன்று இணைக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 215 ஆம் பிரிவின் கீழ் வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ள தோடு சட்டத்தில் நகர முதல்வர் நிதியமொன்று தொடர்பாக குறிப்பிடாததோடு வெவ்வேறு நிதியங்கள் தாபிக்க கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஒஐை ஆம் அத்தியாயம் 6 ஆம் பிரிவு | சகல வீடுகளினதும் குத்தகைக் காலம் 5 வருடமாக இருந்த போதிலும் 19 உத்தியோகத்தர்கள் 5 தொடக்கம் 30 வருடங்கள் வரை வீடுகளில் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | மாநகர சபைக்கு சொந்தமான உத்தியோக பூர்வ இல்லங்கள் மாநகர சபையின் சொத்தாகும். இவ் வீடுகளின் நிர்வாகம் மற்றும் பாவணை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பொதுச் விருப்பின் படி மேற்கொள்ளப்பட்டு உத்தியோகத்தர்கள் இட மாற்றம் பெற்று செல்லும் வரை உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியிருப்பதுடன் அவர்களின் வீட்டு வாடகைப் பணம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 5 வருடங்களுக்கு ஒருமுறை அரச வீடுகளின் வதிவை மாற்றி காதிருக்கும் பட்டியலொன்று செயற்படுத்தப்ப வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின்371(5) ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெறப்பட்ட ரூபா 57,280,087 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | உரிய முற்பணம் விரைவில் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் ஆலோசணை பிரகாரம் முற்பணம் சீர் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 மார்ச் திகதியற்ற PL/7/1/18/1 ஆம் இலக்க (பொது) அரச நிர்வாகஇ உள்நாட்டு விவகார மற்றும் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தலை பின்பற்றாது ரூபா. 10,470,867 தொகை சபை நிதியத்தில் செலவிடப்பட்டு சபைக்குச் சொந்தமான மற்றும் சபைக்கு வெளியுள்ள தரப்பினருக்கும் இலவசமாக பொருட் பொதிகள் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் ஆலோசணையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | மேற் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 உடைய ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கை | ரூபா.100,000 நிதித் தொகையைக் கடந்து செயல்நி கட்டுநிதி பெறுவதில் பிரதான கணக்கீட்டு அதிகாரியின் பரிந்துரையுடன் திறைசேரியில் பூரண அனுமதி பெறப்பட வேண்டியதுடன், அதற்கு இணங்காத வகையில் மாநகர சபை மூலம் உலர் உணவுப் பொருட்கள் பகிர்ந்தளிப்ப தற்காக வரையறை கடந்து ரூபா. 5,000,000 தொகை செயல்நிதி கட்டுநிதி பெறப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பாட்டின் பிரகாரம் முற்பணம் பெற்றுக்கொண்டதாகவும் எதிர்வரும் காலங்களில் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 348,176,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 305,279,341 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

--------------------------

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த வேண்டிய வீதவரி பற்றாக்குறை ரூபா 108,427,329 ஆகும். | சொத்துக்கள் தடை செய்யும் நடவடிக்கை செயற்படுத்தப்பட ஆலோசிக்கப்பட்டிருந்த போதிலும் கொவிட் தொற்று பரவல் காரணமாக அதனை செயற்படுத்த முடியாமல் போனது. 2020.12.31 ஆம் திகதிக்கு காணப்பட்ட ரூபா. 87,886,193 நிலுவையில் ரூபா. 29,077,123 தொகை 2021.03.31 ஆம் திகதிக்கு அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய வருடங்களில் நிலுவை அறவிடப்படும் போது தெளிவான அதிகரிப்பொன்று இந்த 3 மாதங்களிலும் காணப்படுகிறது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய சுற்றுலா வாடகை மற்றும் லொத்தர் கூட வாடகை மீதி ரூபா. 2,976,122 ஆகும். | லொத்தர் கூட மொத்த நிலுவை 2021.04.30 அளவில் அறவிடப்பட்டு முடிந்ததுடன் நிலுவைத் தொகை காணப்படுகின்ற சகல நடமாடும் வியாபாரி களுக்கும் | அறவிடப்பட வேண்டிய வாடகை மீதி உரிய காலரீதியில் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படுகின்ற நிலுவைத் தொகையில் 10% வீதம் மாதாந்தம் அறவிடப்படுவதாக அறியத் தருகிறேன் | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர்க்கட்டண மீதி ரூபா. 64,549,182 ஆகும். அதில் ரூபா. 75,000 இற்கும் அதிக நிலுவை காணப்படுகின்ற 52 நீர்ப் பாவனையாளர்களுக்குரிய ரூபா. 28,076,433 நிலுவை காணப்பட்டது. அந்நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 75,000 இற்கும் அதிக நிலுவை காணப்படுகின்ற நீர்ப் பாவனையாளர்கள் 52 பேரில் சிலர் பணத்தை செலுத்தி இருந்ததுடன் வழக்கு தொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சகல நிலுவைகளும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறியத் தருகிறேன். | நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு முறையான வழிமுறையொன்று பின்பற்றப்பட வேண்டியதுடன் வருடத்தின் பட்டியலிடலை உரிய காலத்தில் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபையின் பிரதான செயலாளரின் மற்றும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பெற வேண்டிய ரூபா. 7,128,450 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா. 117,314,831 ஆன முத்திரைக் கட்டணங்களுமாக இருந்தன. | இக்கட்டணங்களை விரைவில் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தயவுடன் அறிய தருகின்றேன். | உரிய தொகை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மலப் போக்குவரத்து தொடர்புகளுக்காக உப விதிகள் தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படாது கட்டணம் அறவிடப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது ரூபா. | மலப் போக்குவரத்து தொடர்புகளுக்காக தற்போது உப விதிகள் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கை களுக்காக உள்ளூராட்சி | உப விதிகள் தயாரிக்கப்பட்டு வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 48,682,950 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்தம் 5,040 தொன் உக்கலடையும் கழிவுகள் மற்றும் உக்கலடையாத கழிவுகள் சுந்தரபொல திண்மக் கழிவுப்பொருள் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டின் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மானியங்களின் கீழ் ரூபா 123 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கவஷிமா கொம்போஸ்ட் இயந்திரம் 50 தொன் கழிவுப்பொருள் இயலளவுடையதாக இருந்த போதும் அதன் உச்ச பயனைப் பெறுவதற்கான செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ் இயந்திரத்தின் உச்ச பயனைப் பெறுவதில் குப்பைகள் கொட்டும் இயந்திரம்இ பொப் கெட் இயந்திரம் போன்ற பௌதீக வளங்களின் தேவைப்பாடு தாக்கம் செலுத்தியிருந்தது. | குருணாகலை மாநகர சபை மற்றும் குருணாகலை பிரதேச சபைகளில் குப்பைகள் (திண்மக் கழிவுகள்) சுந்தராபொல திண்மக் கழிவுகள் மத்திய நிலையத்திலேயே கொட்டப்படுகின்றன.கழிவுப்பொருள் நிலையத்தின் இயலளவை பயன்படுத்துவதற்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | கழிவுகள் முகாமைத்துவம் முறையாக நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு புதிய மென்பொருளின் கீழ் தமது கடமையை நிறைவேற்றுவதற்காக ரூபா. 2,046,000 பெறுமதியான 60 டெப்லட் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தேவையான மென்பொருளை உள்ளீடு (ரிடழயன) செய்து தேவையான பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெளிக்களத்தில்இ நீர்மானி வாசிப்புஇ வீதவரிப் பட்டியல் வழங்குதல்இ ஆபத்தான மரங்களை வெட்டுதல்இ அனுமதியற்ற விற்பனைகளை நீக்குதல்இ நீர்ப் பராமரிப்பு ஊழியர்கள் போன்றவற்றிற்கு டெப்லட் உபகரணங்கள் வழங்குவதன் அவசியத்தை கணக்காய்விற்கு உறுதி செய்யவில்லை. | குருணாகல் மாநகர சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற டெப்லட் உபகரணங்களுக்கு புதிய மென்பொருள் உள்ளீடு செய்யப்பட்டிருப்பதுடன் அதன் மூலம் சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படலாம். தற்போது நிலவுகின்ற கொரோனா தொற்று காரணமாக பொருட்களை பகிர்ந்தளிப்பதில் உள்ள சிக்கல் காரணமாக அதற்காக அச்சிடும் இயந்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பதை அறியத் தருகிறேன். | தேவைபாட்டியின் படி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த மற்றும் நகர சபைக்கு வருமானம் ஈட்டித் தரக் கூடிய பொதுச் சொத்தாகக் காணப்பட்ட புவனெக ஹோட்டல் அமைந்துள்ள கட்டடம் முறையான அங்கீகாரமின்றி உடைக்கப்பட்டமை தொடர்பாக குருணாகல் மாநகர சபையின் உயர்மட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தொல்பொருள் திணைக்களத்தின் பூரண அங்கீகாரம் மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளாதிருந்ததுடன் 2020 ஜுலை 14 ஆம் திகதி உரிய கட்டடம் உடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் என்று பெயர் குறிப்பிடப்பட்ட பிடியாணை பிறப்பிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் ரூபா. 7,800,000 தொகை வழக்கு கட்டணமாக நகர சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. | மாநகர சபைக்குச் சொந்தமான ஆதனமொன்றாக இருப்பதால் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தனது தீர்மானங்கள் மற்றம் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். மேலும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 309, 310 ஆம் பிரிவுகளின் மூலம் தெளிவான சட்ட பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் சபையால் சட்டக் கட்டணங்கள் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த கட்டடம் உடைக்கப்பட்டமை தொடர்பாக உரிய நிறுவனங்களின் அங்கீகாரம் மற்றும் பொதுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | பொதுச் சபையின் தீர்மானத்தின் பேரில் மாநகர சபை வீட்டுத் தொகுதிக்குச் சொந்தமான் 2644/79 ஆம் இலக்க 211 ஆம் இலக்க 01 ரூட் இ 30 பர்சஸ் காணித் துண்டை முறையற்ற விதத்தில் ஒருவருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் மாநகர சபையின் சொத்துக்கள் கட்டுப்பாடுகள் இல்லாது அனுபவிக்க இடமளிக்கப்பட்டும் இருந்தது. | பொது சபையினால் GC/06/53/2020/12/10ஆம் இலக்க பொது சபை தீர்மானத்தின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் தற்போது குடியிருக்கும் குடியிருப்பாளருக்காக அக்காணியை முறைப்படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் முறையாக அங்கீகாரம் ஒன்றைப் பெற்று இடம் கையளிக்கப்பட வேண்டும். |
| (இ) | மாநகர சபை சட்டத்தின் 36 (1) III ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது சொத்து விற்றல் அல்லது வேறு விதத்தில் மாற்றுதல் தொடர்பில் ஜனாதிபதியின் எழுத்து மூல அங்கீகாரத்தை முன்னரே பெறாது அச் சொத்துக்களை விற்கவோ மாற்றுவதற்கோ சபைக்கு உரிமை இல்லாததுடன்இ வெகரவத்த மாநகர சபைக்கு சொந்தமான இடம் | மாநகர சபை மூலம் பாவணைக்கு எடுக்கப்படாத இடங்கள் இனங் காணப்பட்டு முறையான சபைச் சட்டங்களின் பிரகாரம் மாநகர சபைக்கு வருமானம் பெறப்படும் வகையில் காணியின் | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 361(ii) பிரிவின் பிரகாரம் முறையாக இடம் கையளிக்கப்படவும் மாநகர சபைக்குச் சொந்தமான இடம் பாதுகாக்கப்படவும் |

| | | | |
|---|---|---|---|
| | சட்டபூர்வமாக இடம் மாற்றம் செய்ய பொதுச் சபை தீர்மானம் பெறப்பட்டது. இவ் இடம் தொடர்பான எழுத்து மூல ஆவணங்களை பரீட்சிக்கும் போது பல வருடங்களாக அனுமதியின்றி வாழ்கின்ற பலர் இருந்ததாகவும் பெரும்பாலானோர் அனுமதியின்றி கைப்பற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் அவதானிக்கப்பட்டது. | நிர்வாகம் முகாமை செய்யப்பட்டுள்ளது. | இடம் குத்தகைக்கு விடப்படும் போது ஒப்பந்த நடைமுறை பின்பற்றப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40 (1)(ஊ) பிரிவிற்கு இணங்காமல் வேஹர விற்பனைத் தொகுதியின் 6000 சதுர அடி அளவிலான A பிரிவு ச.தொ.ச. விற்பனை நிலையம் நடாத்திச் செல்வதற்கும் வேஹர வர்தத்க தொகுதியில் 1500 சதுர அளவில் ச்.தோ்.ச கட்டிடத்திற்கு அண்மையில் உள்ள கடை இலக்கம் 38/52 நிஸ்ஸங்க மாவத்தையில் உள்ள குடியிருப்பாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது | உரிய ஒப்பந்தக் காரரான ச.தொ.ச. விற்பனை நிலையம் அக் குத்தகை உடன்படிக்கைக்கு கைச்சாத்திடுவதற்காக பாதுகாப்பு பிணை வைப்பாக ரூபா. 75,000 தொகை அறவிடப் பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் வேஹர ச.தொ.ச. A பிரிவு ரூபா. 250,000 தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டு அத் தொகை 10% வீதம் அதிகரிக்கப்பட்டு அது 03 ஆண்டுகளுக்கு செயற்படுத்தப்பட்டு 2019 ஏப்ரல் முதல் இக் கடை 10% இனால் அதிகரித்து ரூபா. 402,628 இற்கு குத்தகைக்கு விட உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் GC-6(07) 2019.04.09 ஆம் இலக்க பொதுச் சபை தீர்மானத்தின் படி பழைய முறையின் கீழ் வருடாந்த வாடகைத் தொகை அறவிடுதல் மற்றும் லங்கா ச.தொ.ச நிறுவனத்திற்கு வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடப்படும் போது சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெறப்பட்டு குத்தகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் நானாவித வைப்புக்களாக 08 உருப்படிகளின் மொத்த பெறுமதி ரூபா. 590,842,593 ஆக இருந்தது. அது தொடர்பாக கால பகுப்பாய்வின் படி 1 முதல் 5 வருடங்கள் வரையான காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா. 166,767,923 ஆகக் காணப்பட்டது. | உரிய கணக்கு சீர் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதி சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர முதல்வர் இல்ல வேலைத்திட்டத்தின் கீழ் உரிய பிரதேசத்தின் சுயேட்சை அமைப்புக்களுக்கான உபகரணங்கள் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி நடை பெற்ற நிதிக்குழுவின் தீர்மானத்தின் அங்கீகாரம் இன்றி ரூபா. 1,595,831 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ் உபகரணங்களை பகிர்ந்தளித்த சங்கம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக சுயாதீன அமைப்புக்களைப் பதிவு செய்யும் பதிவேட்டின் படி உறுதிப்படுத்த முடியாமல் போயுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்குள் சுயாதீன அமைப்புக்களிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட உபகரணங்கள் உரிய சங்கத்தின் மூலம் பொறுப் பேற்கப்பட்டதாக உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சுயாதீன அமைப்புக்களுக்கு வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பௌதீக பரிசோதனையொன்று நடாத்தப்பட்டு அறிக்கையிடுவதாக அறியத் தருகிறேன். | சங்கங்களுக்கான பொருட்கள் பகிர்ந்தளித்தலில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு பொறுப்பேற்கப்பட்ட தாக உறுதிப்படுத்தல் பெறப்பட்டு ஒரே சங்கத்திற்கு பல தடவைகள் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் முறையாக நடை முறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | கழிவுகள் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பாளர் பொதுச் சுகாதார பரிசோதகரின் வேண்டுகோலுக்கு இணங்க 45,000 பொலிசெக் உறைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருந்ததாகவும் பிரதான வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோலுக்கு இணங்க 04 வகையான 221,173 பொலிசெக் உறைகள் பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக தனியார் நிறுவனமொன்றினால் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 6,520,089 செலுத்தப்பட்டிருந்தது. விவரக் குறிப்புக்கள் அடங்கிய பொலித்தீன் உறை இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்த இவ் உறைகளில் நியமிக்கப்பட்ட அளவு பசளை பயன்படுத்தப்பட முடியாமல் இருந்தது. வருடத்திற்கு சுமார் 30,000 கிலோ கிராம் பசளை உற்பத்தி செய்யப்பட்டு | சுந்தராபொல குப்பை மேட்டின் பொறுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அவ் இடத்திற்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோகர் மூலம் எதிர்வரும் 02 வருடங்களுக்கு அவசியமான பொலிசெக் உறைகளின் தொகை தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் இப் பொருட்கள் வேண்டப்பட்டுள்ளன. | சபையின் தேவைப் படி முறையாக கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். சபை நிதியுதவிகளை செலவிடும் போது பொருளாதார ரீதியில் செயற்றிறனுடையதாகவும் வினைத்திறனாகவும் வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை செய்வதாகவும் அதற்காக வருடத்திற்கு தேவையான உறைகளின் எண்ணிக்கை அண்ணளவாக 600 ஆகும். இம் முழுத் தொகை களஞ்சியசாலைக்குக் கிடைக்கப் பெற்று விநியோகிக்கும் போது அல்லது சூழலுக்குக் கிடைக்கப் பெறும் போது அளவின் பிழையற்ற தன்மை எந்தவொரு அதிகாரி மூலமும் பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. பசளை விற்பனையின் போது ஒவ்வொரு வகையிலும் எவ்வளவு விற்பனை செய்யப்பட்டது என்பது தொடர்பான ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் பராமரிக்கப்பட்டு வராமையால் உறைகளின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாமல் போனதாகவும் 2020 செப்தெம்பர் 12 ஆந் திகதி நடாத்தப்பட்ட பௌதீக தொகையுடன் மீளாய்வாண்டின் நவம்பர் வரையான 29,240 கிலோகிராம் விற்பனை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொலிசெக் உறைகளின் அளவு பெறப்படவில்லை எனவும் அதன் பிரகாரம் சுமார் 87,660 அளவிலான 25 கிலோகிராம் மற்றும் 50 கிலோகிராம் உறைகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36 (1) ஆம் பிரிவிற்கு இணங்காத பொதுச்சபை அங்கீகாரம் மற்றும் நகர பிதா மூலம் நேரடியாக ஆளுனருக்கு எழுதிய கடிதத்திற்கு ஆளுனரின் கையொப்பமிடப்பட்ட முறையற்ற நடைமுறையின் அடிப்படையில் 03 காணிகளை குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அரச காணிகள் மாற்றுதல் தொடர்பான வழிகாட்டல்கள் உள்ளடங்கிய எஸ்.ஈ.ஐ.்.ஏ.்.4.்.34 ஆம் இலக்க மற்றும் 1995/7/12 ஆம் திகதிய ஜனாதிபதி செயலாளர் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளர் மூலம் நடாத்தப்படுகின்ற விற்பனை நிலைய மதிப்பீட்டின் படி தீர்மானிக்கப்பட்ட உண்மையான வாடகையை தீர்மானித்து அறவிடப்பட வேண்டுமெனவும் வருமானப் பரிசோதகரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கூறிய குத்தகை வழங்கல் இடம் பெற்றிருந்தன. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிமேதகு ஜனாதிபதியின் அனுமதி கிடைக்கும் வரை ஓலந்த கல்லறை நிலம்இ குமாரதுங்க மாவத்தை காணிஇ பொது வைத்தியசாலைக்கு முன்னால் பொதுக் கழிவறை அமைந்துள்ள காணி என மூன்று காணிகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதுடன் கையளிப்பு கட்டளைகள் கிடைத்த பின்னர் அதிமேதகு ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது. | மா நகர சபையின் காணிகள் குத்தகைக்கு விடும் போது மா நகர சபை கட்டளைச் சட்டம்இ அரச காணிகள் கட்டளைச் சட்டம் மற்றும் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசின் மதிப்பீடுகள் பெறப்பட்டு முறையாக குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 வெளிப்படையான முறைகேடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மா நகர சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற முன்பள்ளிக்கான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 4,481,000 தொகை செலுத்தப் பட்டிருந்தது. இக் கொள்வனவிற்காக தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையொன்று கோவையில் காணப்படாதததுடன்இ அதற்காக தொழில்நுட்ப மதிப்பீடொன்று இல்லாமல் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அவதானிக்கப்பட்டது. இந் நிறுவனம் தொடர்பான பரிசீலனையில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது முன்பள்ளி உபகரணங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் இல்லாமையால் இக் கொள்வனவில் முறைகேடுகள் செய்யப்பட்டு அரசுக்கு சாதகமான முறையான கொள்வனவொன்று நடைபெற்றிருக்கவில்லை. | கணக்காய்வின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பெறுகை வழிகாட்டி முறைமைகளுக்கு ஏற்ப சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 செயலற்ற அல்லது குறைவாகப் பய்படுத்தப்பட்ட சொத்துக்கள்இ ஆலைகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதிஏற்பாடுகளின் கீழ் சுமார் ரூபா 80 இலட்சம் செலவிடப்பட்டு பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் மீள் சுழற்சி செயற் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு பிளாஸ்டிக் சிறு துண்டுகளாக உடைத்தல் மற்றும் பிளாஸ்டிக்கை உருக்குவதற்காக 02 உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டளவில் இவ் உபகரணம் செயற்பாடற்று காணப்பட்டதுடன் மீண்டும் பழுதுபார்க்கப்பட்டு செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் செயற்திட்டம் தொடர்பாக ஏற்பட்ட செலவினம் செயற்பாடற்ற செலவினமாக காணப்பட்டது. | செயற்பாடற்று காணப்படுகின்ற பிளாஸ்டிக் மீள்சுழற்சி பிரிவு பழைய நிலைக்கு மீட்டெடுக்கக் கூடிய தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு மீண்டும் செயற்படுத்தப்படும் நிலைக்கு மாற்ற உத்தேசிக்கப் பட்டுள்ளது. தற்போது தொழில்நுட்ப ஆதரைவப் பெற்றுக் கொள்ள வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

-----------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------ | ------------- | -------------- |
| (அ) | இந் நிர்மாணம் தொடர்பாக வடிவமைப்பு மற்றும் நிர்மாண முறை தேர்ந்தெடுக்கப்பட்டு மாநகர சபையின் சிவில் பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய சகல வளங்கள் காணப்பட்டாலும் ஏனைய தொழில்நுட்ப ஆதரவுகள் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தும் மாநகர சபைக்கு மிகவும் சாதகமான முறையில் குறைந்த செலவுடன் உத்தியோகபூரவ இல்லம் நிர்மாணிக்கப்பட இருந்த சந்தர்ப்பம் இவ்வாறு இழக்கப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டாலும் உரிய காலக்கெடுவை பெற்றுக் கொள்ளாமை மற்றும் இரண்டாம் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரரின் தகுதித் திருத்தத்தால் ஒப்பந்தக்காரர்களின் வழங்கல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இச் செயற்றிட்டத்தில் தரைத் தளம் மற்றும் முதலாம் மாடி என்பன மட்டுமே காணப்படுவதால் மின் உயர்த்தி (lift) நிறுவுவதற்கு அவசியமற்றுக் காணப்பட்டதுடன் ரூபா. 4,129,600 செலவினத்தில் மின் உயர்த்தி ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | மாநகர சபையில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் போது மாநகர சபைக்குச் சொந்தமான சாதகமான பெறுகை முறையொன்று தெரிவு செய்யப்பட்டு பெறுகை வழிகாட்டியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் போது நிர்மாணப் பொருட்களின் தன்மைஇ தரத்தின் படி வேலையின் நிறைவை சரிபார்க்க வேண்டும். |
| (ஆ) | மத்திய சந்தை நிர்மாணத்திற்காக ரூபா 687,068,527 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ரூபா 948,518,334 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 இன் பிரிவின் பிரகாரம் அமைச்சு பெறுகை குழுவின் அதிகாரத்திரத்தில் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் மாநகர சபையின் பெறுகை குழுவனால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இப்பெறுகை தொடர்பாக பெறுகை மற்றும் மதிப்பீட்டுக் குழு நியமனம், கேள்வி அறிவித்தலை தயாரித்தல் உட்பட கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் பெறுகை குழுக் கூட்டங்களை நடாத்துதல், கேள்வி அறிவித்தலை பிரசித்தப்படுத்தல் | வட மேல் மாகாண பொறியியல் திணைக்களத்திற் கு ஆரம்ப மதிப்பீடு வழங்கப்பட்டு அங்கு குழுப் பரிந்துரை அடிப்படையில் அங்கு ஆரம்ப மதிப்பீட்டில் வளி பதனாக்கி மற்றும் ீசழளளைழயெட ளரஅ தொகைகள் மாற்றப்பட்டன. | மதிப்பீடு டீளுசு (அங்கீகரிக்கப்பட்ட கட்டிடங்கள்) பிரகாரம் தயாரிக்கப்பட்டுஇ பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்வி வழங்கப்பட்டு பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணம் தரமான முறையில் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கேள்வி பிணைகளைப் பெற்றுக் கொள்ளல் கேள்வி மதிப்பீடு உடபட பெறுகை செயற்பாடு முழுவதும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. இப்பெறுகை செயற்பாடு ஆரம்பம் முதல் கேள்வி வழங்குதல் வரையான காலப்பகுதியில் குறித்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரப்பினர் மற்றும் நிறுவன பொறியியலாளர் மதிப்பீட்டை மிகைத்த ரூபா 281,934,447 தொகைக்கு அதாவது 41 சதவீதத்தை மிகைத்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விதாரரருக்க வழங்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வட மேல் மாகாண பொறியியல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு செயற்றிட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து குறிப்பிடப்பட்டு அதன் பின்னர் பின்னர் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | |
| (ஆ) | மாளிகாபிடிய கேட்போர்கூட நிர்மாணம் தொடர்பாக பொறியிலாளர் மதிப்பீடு ரூபா. 165,207,414 உடைய ஒப்பந்தத்திற்கான கேள்வி கோரலின் பிரகாரம் ரூபா. 185,456,135 மற்றும் ரூபா 300,655,750 என இரண்டு கூறுவிலை பெறப்பட்டன. அவ் விலைகள் பெறுகை வழிகாட்டியின் 7.9.2 இன் பிரகாரம் ரூபா 500 மில்லியன் விஞ்ஞாத ஒப்பந்தங்களின் விரிவான ஏல மதிப்பீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றாதுஇ குறைந்த பட்ச கேள்வித் தொகை பொறியிலாளர் மதிப்பீட்டை விட 18மூ இனால் அதிகமாக இருந்த போதும் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறுகை முறைமை தெரிவு செய்யப்பட்டு கேள்வி மதிப்பீடுகளில் விலகல்களைப் கருத்திற் கொண்டு ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும். |

### 3.9 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஜனவரி 01 ஆம் திகதிக்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் சபையின் தீயணைப்புப் பிரிவிற்காக 05 பதவிகளுக்காக 36 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது அச் சேவைக்குரிய சேவை பிரமாணக் குறிப்பொன்று தயாரிக்கப்படாதிருந்ததால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இச் சேவை பிரமாணக் குறிப்பினை தயாரித்து உள்ளூராட்சி மன்ற ஆணையாளர மூலம் ஆளுனருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | சேவை பிரமாணக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டு இச் சேவைக்கு உரிய பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து இச் சேவையை செயற்திறனுடன் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24,000 லீற்றர் கொள்ளளவிலும் அதிக மலக் கழிவு முகாமைத்துவ தொகுதி செயற்பட்டு வருவதுடன் அதில் வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர் சுற்றுச் சூழல் நீர் நிலைகளுக்குத் திருப்பப்பட்டு காணப்பட்டது. அவ்வாறு ஏற்படுகின்ற நீர் வழிகள் மாசடைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மலக் கழிவுகள் திறந்த வெளிகளில் விடுவதன் மூலம் உள்ளக நீர் மூலாதாரங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாக தேவையான தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக நகர சுகாதார வைத்திய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட வழிகாட்டல்களுக்கு விசேட கவனம் செலுத்துகிறேன். | இயற்கை சுற்றுச் சூழல் அமைப்புக்களுக்கு ஏற்படுகின்ற சேதம் குறைக்கப்படும் வகையில் கழிவுகளை வெளிேற்றுதல் முறைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |